செ.வெ.எண்.60 நாள்.25.03.2017

திருநெல்வேலி, பாளையங்கோட்டை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில் மாநிலங்களவை உறுப்பினர் திரு.எஸ்.முத்துக்கருப்பன் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து விளையாட்டு அரங்க பார்வையாளர் மாடத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்கள்.

--------

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில், ரூ.25 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு அரங்க பார்வையாளர் மாடத்தினை மாநிலங்களவை உறுப்பினர் திரு.எஸ்.முத்துக்கருப்பன் அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (25.03.2017) திறந்து வைத்தார்கள்.'

விளையாட்டு அரங்க பார்வையாளர் மாடத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திறந்து வைத்து, பேசியதாவது–

தமிழ்நாடு அரசு கல்வி மற்றும் விளையாட்டுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. அடிப்படை கட்டமைப்பினை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. அடிப்படை கட்டமைப்பு வசதி சிறப்பாக அமைந்தால் தான் அதில் படிக்கும் மாணவர்களுக்கு ஊக்கமும், ஏற்றமும் அமையும். கல்வி என்பது ஒருவன் உள்ளத்தால் துணிவும், உடல் அளவில் பணிவும் வந்து சேரும். கல்வி என்பது ஒருவன் தலைமுறையுடன் நின்று விடாது. அக்கல்வியானது அவனது சந்ததியினரிடம் மட்டுமல்லாது பல தலைமுறைக்கும் எடுத்துச் செல்லும். ஆகவே, கல்வி என்பது ஈடு இன்றியமையாதாகும். கல்வி என்பது அட்சய பாத்திரம் போல அறிவுத்திறன் குறையாமல் மென்மேலும் வளர்ந்து கொண்டே இருக்கும். தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை உட்கட்டமைப்புக்கு ரூ.440.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தியாவிலேயே பிற மாநிலங்களை விட தமிழக அரசுதான் அதிகளவில் கல்வித் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்து, சாதனைப் படைத்துள்ளது.

தமிழக அரசு பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு சீருடைகள், நோட்டு, புத்தகங்கள், புத்தக பைகள், கலர் பென்சில், சாமின்ட்டிரி பாக்ஸ், காலணிகள், இலவச பேருந்து பயண அட்டைகள், இருசக்கர மிதி வண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது. கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு இலவச மடிக்கணனி வழங்கி கல்வித் துறையில் புரட்சியினை தமிழக அரசு ஏற்படுத்தி வருகிறது. தமிழக அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்வி பயில உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழக அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட்டு வருகிறது. இணையதளம் மூலமாக கல்வி உதவித் தொகை, முதியோர் உதவித் தொகை, வறட்சி நிவாரண உதவித் தொகை போன்ற பல்வேறு உதவித் தொகைகளை அவர்களது வங்கி கணக்குகளில் நேரிடையாக அரசு செலுத்தி வருகிறது. கல்வியில் வெற்றி என்பது கடின உழைப்பின் மூலம் தான் அமையும். சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை அமைப்பதன் மூலம் திறமையான மாணவ, மாணவியர்களை உருவாக்கலாம். கல்வி என்பது மாணவ, மாணவியர்களுக்கு வாழ்க்கையில் அறிவுத் திறத்தினை மேம்படுத்தும். அதோடு மட்டுமல்லாது அவர்களின் குடும்ப வாழ்க்கையும் உயர்வதுடன், பொருளாதரம் உயரும். எனவே, மாணவ, மாணவியர்களாகிய நீங்கள் உயர்கல்வி பெற்று தங்களது உயர்கல்வி பெருவதுடன், தங்களின் குடும்ப பொருளாதாரத்தினை உயர்த்திக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி தாளாளர் திரு.பத்ஹூர் ரப்பானி, நெல்லை மாவட்ட வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுச் சேவைச் சங்கத் தலைவர் திரு.மஹபூப் ஜான், முக்கிய பிரமுகர் திரு.ஹரிகர சிவசங்கர், ஆட்சிக்குழு மன்ற குழு உறுப்பினர்கள் திரு.முஹம்மது நசார், திரு.முஹம்மது நவாப் ஹூசைன், திரு.அப்துல்காதர், தமிழ்த்துறைத் தலைவர் திரு.மகாதேவன், முக்கிய பிரமுகர்கள் திரு.தச்சை ராஜா, திரு.ஆர்.பி. ஆதித்தன், திரு.செந்தில் ஆறுமுகம், திரு.எம்.சி.ராஜன், திரு.நௌசத், திரு.விவேகானந்த பாண்டியன் உள்பட அரசு அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவியார்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.